**செய்தி வெளியீடு எண் : 1717** **நாள் : 30.09.2022**

**செய்தி வெளியீடு**

**பதிவுத்துறைக்கு புதிய சீருந்துகள் வழங்குதல்**

2021–22–ஆம் ஆண்டிற்கான வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பதிவுத்துறையின் உள்தணிக்கைப் பணியையும் கள ஆய்வுகளையும் தணிக்கை மாவட்டப் பதிவாளர்கள் துரிதமாக மேற்கொள்ள ஏதுவாக அனைத்து தணிக்கை மாவட்டப் பதிவாளர்களுக்கும் புதிய வாகனங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் முதற்கட்டமாக 2021–2022–ஆம் நிதியாண்டில் 25 பொலேரோ சீருந்துகள் பதிவுத்துறையின் தணிக்கை மாவட்டப் பதிவாளர்களின் அலுவலக உபயோகத்திற்காக கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுவிட்டன.

தற்போது கூடுதலாக 23 புதிய சீருந்துகள் ரூபாய் 1,91,85,611/– செலவில் வாங்கப்பட்டு மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்களால் 28.09.2022 அன்று சம்பந்தப்பட்ட பதிவுத்துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், வணிகவரி துறையின் முதன்மைச் செயலாளர் / ஆணையர், திரு தீரஜ் குமார், இ.ஆ.ப., வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., மற்றும் பதிவுத்துறை தலைவர் திரு ம.ப. சிவனருள், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in